பதிவு எண். M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ.,எம்.பி.

மலர்: 20] சென்னை: ஆவணி 7 (23—8—72) புதன் — வெளியூர்: ஆவணி 8 (24—8—72) வியாழன் [இதழ்: 59

கல்பாக்கம் அணு மின்சார நிலையம்

உற்பத்தித் துவங்கக் காலதாமதம்

புதுடில்லி, ஆக. 23—

" தமிழ்நாட்டிலுள்ள கல்பாக்கம் அணு மின்சார நிலையத்தை இயக்கிவைப்பது ஓராண்டு தாமதமடையும் " என்று மக்களவையில், மின்சார அமைச்சர் டாக்டர் கே. எல். ராவ் கூறினர்.

கழக உறுப்பினர் வி. மாயவனின் கேள்விக்குப் பதிலளிக்கையில்

(4-ம் பக்கம் பார்க்க)

தலைக்குமேல் கத்தி-- மறக்க வேண்டாம்

அரசு ஊழியர்கட்கு அள்ளி வழங்குவதில் சளைக்கவில்லை

வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு இங்கேதான் ஊதிய உயர்வு அதிகமாகும்

வரி கொடுப்போர் வெகுண்டு எழுந்தால் விளைவு என்னவது ?-- முதலமைச்சர் கலைஞர் உருக்கமான வினு

சென்னை, ஆக. 23---

"நாட்டின் பொருளாதார நிலையை எண்ணிப் பார்க்கவேண்டும்; நிறைவேற்ற வேண்டிய திட்டங்களை எண்ணிப் பார்க்க வேண்டும்; கிராமப் புறத்தில் உள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கவேண்டிய திட்டத்தை மத்திய அரசும் -- மாநில அரசுகளும் ஏற்றுக் கொண்டிருக்கின்றன; இந்த நிலையில், மற்ற மாநிலங்களை மிஞ்சக்கூடிய அளவிற்கு நல்ல காரியங்களை நாம் நடத்திவருகிறோம்; அதற்கு ஒத்துழைப்புத் தருகின்ற வகையில், 'இது போதும் -- வருங்காலத்தில் வேண்டுமானல் யோசியுங்கள்; இதோடு முற்றுப் புள்ளி வைத்துவிடாதீர்கள்; 'கமா'வாக இருக்கவேண்டும் என்று வேண்டுமானலும் சொல்லுங்கள்; நான் அதை மறுக்கவில்லை -- முற்றுப்புள்ளி வைத்துவிட்டதாகவும் சொல்லவில்லை.

"யாருடைய பிரச்சினையும் இன்றோடு தீருகின்ற பிரச்சினையல்ல; வாழ்க்கையில் காலம் செல்லச் செல்ல எத்தனை எத்தனையோ தேவைகள் பெருகிக் கொண்டிருக்கின்றன; தேவைகள் பெருகுகின்ற நேரத்தில் அவைகளை வழங்க வேண்டியது அரசின் பொறுப்பாகும்.

'எத்தனையோ முறை எல்லா மாநில முதலமைச்சர்களும் எடுத்துச் சொல்லியும் கூட, மத்திய அரசு திடீர்த் திடீரென்று மாநில அரசுகளைக் கலக்காமலே சம்பள உயர்வை அளிக்கிறது; ஊதியக் குழுவைப் போடுகிறது; நாம் சம்பள உயர்வு அளித்தால் அதைக் கணக்கில் எடுத்துக்கொள்ள மறுக்கிறது; தயங்குகிறது -- தயக்கம் காட்டுகிறது, டில்லிப் பட்டணம் நோக்கி நடக்கவேண்டியிருக்கிறது; அப்படிப்பட்ட சங்கடங்கள் எல்லாம் ஏற்படுகின்றன!

சில மாதங்களுக்கு முன்பு அரசு அலுவலர் கூட்டத்தில், அவர்களது கோரிக்கையை ஏற்று ரூ. 10 உயர்த்துவதாக அறிவித்தேன்; அதற்கு ரூ 6 கோடி செலவாயிற்று, அதை மத்திய அரசு ஏற்கத் தயங்குகிறது என்பதை மறந்துவிடக்கூடாது!

"இன்றைக்கு ரூ. 60 கோடி அளவில் நமது மாநிலத்தின் அதிகப் பற்று (ஓவர் டிராப்ட்) இருக்கிறது என்பதையும் மறந்துவிடக் கூடாது; அதுபற்றிப் பல்வேறு முதலமைச்சர்களுடன் சேர்ந்து திட்ட அமைச்சருடனும் -- மற்றவர்களுடனும் கலந்து பேசிச் சரிசெய்து (அட்ஜஸ்ட்மெண்டு) இருக்கிறோம்; எப்படிக் கொஞ்சம் கொஞ்சமாக அந்தத் தொகையைக் கட்டுவது என்பது பற்றியும் சீர்செய்து இருக்கிறோம்; எனினும், ரூ. 60 கோடி அதிகப் பற்று என்பது நமக்கு தலைக்குமேலே தொங்கிக் கொண்டிருக்கும் கத்தி என்பதை மறந்துவிடக் கூடாது! இந்த நிலையில், அரசு ஊழியர்களுக்கு மட்டும் அள்ளிக் கொடுத்துவிட இயலுமா என்பதையும் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்'

—என்று, முதலமைச்சர் கலைஞர் அவர்கள், சட்டமன்ற மேலவையில் இணை மானியக் கோரிக்கை மீது நடைபெற்ற விவாதத்துக்குப் பதிலளித்துப் பேசுகையில், உருக்கத்தோடு குறிப்பிட்டார்கள்! அவரது உரை வருமாறு:—

" ஊதியக் குழு பரிந்துரை எவ்வளவு கோடி ரூபாயை விழுங்கிக் கொண்டிருக்கிறது என்பதை உறுப்பினர்கள் மறக்கக்கூடாது! தொடக்கத்தில் இரண்டாவது ஊதியக் குழுவின் முடிவுகளைச் செயல்படுத்திய நேரத்தில், சற்றேறக்குறைய ரூ. 23 கோடியும், நான் ஐந்து திங்களுக்கு முன்பு என். ஜி. ஓ.-க்கள் நடத்திய மாநாட்டில் நான் அறிவித்தற்கிணங்க ரூ. 10 உயர்வு அளித்ததன் மூலம் ரூ. 6 கோடியும், இப்போது அறிவிக்கப்பட்டிருக்கின்ற ஊதிய உயர்வுகள் மூலம் மேலும் ரூ. 5 கோடியும் அரசு ஊழியர்களுக்குச் சில மாதங்களுக்குள் -- அரசின் சார்பில் ஊதிய உயர்வுகளாக அளிக்கப்பட்டிருக்கின்றன.

ஒவ்வொரு தடவையும் பரிசீலனைகள் முடிந்து அறிவிப்புகள் வருகின்றபோதெல்லாம், 'இதிலே முரண்பாடுகள் இருக்கின்றன' என்று ஒவ்வொரு பிரிவினரும் கிளர்ச்சிகளில் ஈடுபடுவது அல்லது மனக்குறையை வெளிப்படுத்திக் கொண்டிருப்பது நல்லதல்ல!

பொதுவாகத் தென்னகத்தில் இருக்கின்ற நான்கு மாநிலங்களையும் உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால், வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு ஒவ்வொரு துறையிலுள்ள அரசு அலுவலாளர்களுக்கும், அதிகமாக ஊதியத்தை வழங்கி வருகிறோம்.

இப்படி எல்லா வகையிலும் பார்த்தால் பெரும்பான்மையான அளவிற்கு மற்ற மாநிலங்களை எல்லாம் மிஞ்சுகின்ற அளவிற்கு அதிக ஊதியத்தைத் தமிழ்நாட்டில் இருக்கின்ற அரசாங்க ஊழியர்கள் தான் பெறுகிறார்கள் என்பதை யாரும் ஆட்சேபிக்க முடியாது.

ரூ. 400 ஊதியம் பெறுகின்ற அரசு ஊழியர் ஒருவர், ரூ. 500 வேண்டும்--ரூ. 100 அதிகமாக வேண்டுமென்று போராடுகின்ற நேரத்தில்--அதற்காகப் போராட்டம் நடத்துகின்ற ஆசிரியர் சமுதாயமானலும்--அரசாங்க ஊழியர்களானலும்--நான் மெத்த பணிவன்போடு அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன் -- 'நீங்கள் அதிகமாகக் கேட்கின்ற அந்த ரூ. 100 ஐக்கூடத் தங்கள் வாழ்க்கையில் ஊதியமாகப் பெருத பல லட்சோபலட்சம் மக்கள் இந்த நாட்டில் இருக்கிறார்கள்' என்று!

அவர்கள் வழங்குகின்ற வரிப் பணத்தையெல்லாம் அரசாங்க ஊழியர்களுக்குக் கொடுத்துவிட்டு--ஓர் அரசு அவர்களைத் திருப்திபடுத்திக் கொண்டே இருக்குமானல், வரி கொடுப்போரெல்லாம் கிளர்ச்சி செய்யத் தொடங்கினல் அரசு தாங்காது!

வரி கொடுப்பவர்கள் கேட்கலாம் -- 'அரசாங்க ஊழியர்களுக்கு அள்ளி அள்ளிக் கொடுக்கிறீர்களே; முன்பு ரூ 23 கோடி அறிவித்தீர்கள்; இப்போதும் ஊதிய உயர்வு அறிவித்திருக்கிறீர்கள்; இப்படியே வரிப் பணத்தை வாங்கிக் கொடுத்துக்கொண்டே இருப்பீர்களானல், என்னென்ன திட்டங்களை எங்களுக்குத் தரப் போகிறீர்கள்--எங்கள் வரிக்கு வழி என்ன' என்று கேட்கத் தொடங்கினல், பிறகு அவர்களைச் சமாளிக்க வேண்டிய ஒரு நெருக்கடி நிலை அரசுக்கு ஏற்படுமா ஏற்படாதா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

'எங்களைப்பற்றி நீங்கள் நன்ருகத் தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிறீர்கள், 'இது குட்டக் குட்டக் குனிகின்ற அரசு' என்பதைத் தெரிந்து கொண்டிருக்கிறீர்கள்; இனிமேல் குனிந்து கொண்டிருக்கப் போவதில்லை-- நிமிர்ந்து நிற்க வேண்டிய நிலையில் இந்த அரசு இருக்கிறது என்பதை மிகுந்த பணிவன்போடு அரசாங்க ஊழியர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்களால் முடியாவிட்டால், இவ்வளவையும் வழங்க ஏற்றதொரு அரசு வருமானல் நாங்கள் விலகிக்கொள்ளத் தயாராக இருக்கிறோம்! 'அப்படிப்பட்ட ஓர் அரசு வரும்; கேட்டதையெல்லாம் கொடுக்கும்' என்று ஆசிரியர்களும்--அரசாங்க ஊழியர்களும் கருதுவார்களானல், நாங்கள் விலகிக்கொள்வதற்கு தயாராக இருக்கிறோம்!"

ஆர்.எஸ்.எஸ். இயக்கம் தடை செய்யப்படுமா?

காவல் துறையினர் கண்காணித்து வருவதாக முதலமைச்சர் தகவல்

சென்னை, ஆக. 23—

"ராஷ்டிரீய சுயம் சேவக் சங்கத்தின் நடவடிக்கைகளைக் காவல் துறையினர் உன்னிப்பாகக் கவனித்துவருகிறார்கள்" என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இன்று சட்டப் பேரவையில் தெரிவித்தார்.

இதன் தொடர்பாகக் கேட்கப்பட்ட கேள்விகளும்-முதலமைச்சர் அளித்த பதில்களும் வருமாறு:—

அ. தேவேந்திரன்:—"சென்னை நகரில் பொது மைதானங்களில் ஆர். எஸ். எஸ். இயக்கத்தினர் பயிற்சி வகுப்பு நடத்துவது அரசுக்குத் தெரியுமா?"

முதல்வர்:—"ஆர். எஸ். எஸ். சங்கத்தினர் தங்கள் சொந்த இடங்களில் உடற் பயிற்சி வகுப்புகள் நடத்துவதாக அரசுக்குத் தகவல் கிடைத்துள்ளது; பொது மைதானங்களில் அல்ல!"

கேள்வி:—"காந்தியைச் கொன்ற இயக்கத்தைச்சேர்ந்த இந்த ராஷ்டிரீய சுயம் சேவா சங்கம் தடை செய்யப்படுமா?"

முதல்வர்:—"இப்போது அந்த இயக்கத்தைக் காவல் துறையினர் கண்காணித்து வருகின்றனர்; அவர்களுடைய நடவடிக்கைகள் எப்படி இருக்கின்றன என்பதைப் பொறுத்திருந்து பார்த்து, தடை போட வேண்டிய அவசியம் ஏற்பட்டால் அதுபற்றி டில்லிக்குச் சிபாரிசு செய்யலாம்."

மற்றொரு கேள்விக்குப் பதிலளிக்கையில் முதலமைச்சர் கூறியதா

(1-ம் பத்தி பார்க்க)

(5-ம் பத்தித் தொடர்ச்சி)

வது:—

"ஆர். எஸ் எஸ் இயக்கம் மண்ணாட்டுத் தொடர்புள்ள இயக்கம் என்று கூறுகிறார்கள்; 'அது, அரசியல் தன்மையுடையது' எனக் காவல் துறையினர் கருதிக் கண்காணித்து வருகின்றனர்."

மருத்துவக் கல்லூரிகளில் மாணவர் எண்ணிக்கை அதிகரிக்கும் பிரச்சினை

நிபுணர் குழுக்களின் பரிந்துரைகள் யாவை?

அமைச்சர் க. அன்பழகன் நிலைமை விளக்கம்

சென்னை, ஆக. 22—

"1971—72 ல், மருத்துவக் கல்லூரிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் பெண்கள் 288 பேர்களாவர்"

என்று மக்கள் நல்வாழ்வு அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன், சட்டப் பேரவையில், கோ. இளங்கோவன் கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

என். கிட்டப்பா:—"மருத்துவக் கல்லூரியில் மாணவர்களுக்கான இடங்களை அதிகப்படுத்தும் செயற்குறிப்பு உள்ளதா?"

அமைச்சர்:—"மருத்துவ நிபுணர் குழுவும், 'மாணவர்களுக்கு எந்த முறையில் கல்வி கற்பிக்க வேண்டும்' என்று ஆராய்ந்த குழுவும், 'சிறந்த முறையில் பயிற்சியும் தேர்ச்சியும் பெற வேண்டுமானால், மாணவர்களை அதிகமாகச் சேர்க்கக் கூடாது' என்றும், 'இந்த அளவுக்குக்கூட மாணவர்களைச் சேர்த்திருப்பது கூடாது' என்றும் பரிந்துரை செய்திருக்கின்றன; அந்த அடிப்படையில், 'மாணவர் எண்ணிக்கையை ஓரளவு குறைக்க வேண்டும்' என்று கூறப்பட்டுள்ளது.

"இப்போது ஆண்டுதோறும் ஆயிரம் மாணவர்கள் தேர்ச்சி பெற்று வருகிறார்கள்; இன்னும் 5 ஆண்டுக் காலத்தில் 600 அல்லது 700 மாணவர்கள் கூடுதலாகக் கூடும்; இவர்களில் 100 பேருக்குத்தான் ஓராண்டில் அரசு வேலை கொடுக்க முடியும்; மேலும், பட்டம் பெற்ற பலருக்கு வேலை கொடுக்க முடியவில்லை; மேலும் மாணவர் எண்ணிக்கையை அதிகப்படுத்தினால் கோடிக்கணக்கில் பணம் செலவிட வேண்டும்."

மருத்துவத் துறை பிரச்சினைகள்

மேலும் துணைக் கேள்விகட்கு அமைச்சர் பதிலளிக்கையில் கூறியதாவது:—

"இப்போது எழுநூறு எம்.பி.பி.எஸ். டாக்டர்கள் கிராமங்களில் பணியாற்றுகிறார்கள்; மற்றும் எல்.ஐ.எம்., ஜி.சி.ஐ.எம். டாக்டர்கள் 15,000 பேர் கிராமங்களில் பணியாற்றுகிறார்கள்; இவர்களையல்லாமல், ஹோமியோபதி டாக்டர்களும், பாரா-மெடிகல் அசிஸ்டெண்டுகளும் கிராமங்களில் பணியாற்றுகிறார்கள்.

"நகரங்களில் உள்ள தரத்துக்குக் கிராமங்களில் தரமான மருத்துவ வசதி கிடைக்கவில்லை என்று வேண்டுமானால் கூறலாம்; 'கிராமப் பகுதியில் மருத்துவ வசதியே இல்லை' என்று இப்போது கூற முடியாது.

"மருத்துவக் கல்லூரியில் ஒரு மாணவருக்கு ரூ. 35,000 அரசு செலவிட வேண்டியுள்ளது; மேலும், மருத்துவக் கல்லூரிச் செலவுகளையெல்லாம் சேர்த்தால், ஒரு மாணவருக்கு ரூ. 80,000 முதல் ரூ. 1 இலட்சம் வரை ஆகும்.

"நவீன வசதிகள் நாட்டில் பெருகிவரும் இந்தக் காலத்தில், எல்.எம்.பி.-போன்ற குறுகிய கால மருத்துவப் பயிற்சியளிப்பது பயன்படாது.

"ஐந்தரை ஆண்டு என்று இருக்கும் மருத்துவப் படிப்புக் காலத்தைக் குறைப்பதற்கில்லை.

"இப்போது நெல்லை--கோவை ஆகிய இடங்களில் உள்ள மருத்துவக் கல்லூரிகளுக்கான கட்டிடங்கள் கட்டுவதற்கே ரூ. 75 இலட்சம் தேவைப்படுகிறது; மேலும் மருத்துவக் கல்லூரிகளைப் புதிதாகத் தொடங்குவோமானால் பணம் அதில் முடங்கிவிடும்; கிராமங்களில் மருத்துவ நிலையங்களைக் கட்ட முடியாமல் போய்விடும்.

"செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரியில் போதிய அளவுக்குப் பலதரப்பட்ட நோயாளிகள் வருவதில்லை என்றும், அதனால் பலதரப்பட்ட நோயாளிகளையும் பரிசோதிக்கும் வாய்ப்பு அங்குள்ள மாணவர்கட்கு ஏற்படவில்லை என்றும், எனவே அந்த மருத்துவக் கல்லூரியைச் சென்னைக்கு மாற்ற வேண்டும் என்றும், அந்தக் கல்லூரி மாணவர்கள் கோரிக்கை எழுப்பி வருகிறார்கள்; எதிர்க் கட்சித் தலைவர்கள், இதற்கு எந்தவித அரசியல் நோக்கமும் கற்பிக்காமல் ஒப்புதல் அளிப்பார்களானால், செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரியை சென்னைக்கு மாற்றலாம்."

கைத்தறி நெசவாளருக்கு ஊதிய விகிதம்

நிர்ணயிக்கக் குழு அமைப்பு

சென்னை, ஆக. 23—

கைத்தறி நெசவு தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதிய விகிதங்களை நிர்ணயிப்பது குறித்து விசாரணை நடத்தத் தமிழக அரசுக்கு ஆலோசனை கூறுவதற்காகக் குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது.

குழுவின் தலைவர் தொழிலாளர் நலத் துணைக் கமிஷனர் ஆவார்; இவர் தலைமையில் எட்டு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்; அவர்களில் இருவர் சுயேச்சை (அரசாங்க)ப் பிரதிநிதிகள்; மூன்று பேர் கைத்தறித் தொழில் அதிபர்களின் பிரதிநிதிகள்; மூன்று பேர் கைத்தறி நெசவாளர்களின் பிரதிநிதிகள்.

கரும்பு விலை நிர்ணயத்தில் டில்லியின் போக்கு

தமிழ்நாடு உணவு அமைச்சர் ப. உ. சண்முகம் வருத்தம்

சென்னை, ஆக. 22—

சர்க்கரை ஆலைகளுக்குக் கொடுக்கப்படும் கரும்புக்கு விலை நிர்ணயம் செய்வதில் மத்திய அரசின் போக்கு பற்றிச் சட்டப் பேரவையில் உணவு அமைச்சர் ப. உ. சண்முகம் வருத்தம் தெரிவித்தார்; இத்தொடர்பில் அவர் கூறியதாவது:—

"ஒரு டன் கரும்பு விலை ரூ 73.70 என்று விலை நிர்ணயம் செய்து மத்திய அரசு உத்தரவு போட்டுவிட்டு -- தனியாக நேரில் பேசும்போது, 'கரும்புக்கு மேலும் விலை வாங்கிக் கொடுக்க வேண்டும்' என்று சொல்லுகிறது; இதனால் உத்தரவு ஒன்றும் நேரில் சொல்வது வேறு விதமாகவும் இருக்கிறது.

"கரும்புக்கு இன்ன விலை வாங்கித் தரவேண்டும் என்று நிர்ணயமாக மத்திய அரசு முடிவு செய்து உத்தரவு போட்டால் அந்த விலையை விவசாயிகளுக்கு சர்க்கரை ஆலை அதிபர்களிடமிருந்து அரசு வாங்கித் தரும்."

கேள்வி:—"மற்ற மாநிலங்களைவிடத் தமிழ்நாட்டில்தான் கரும்புக்காக விவசாயிகளுக்கு கொடுக்கப்படும் விலை குறைவு என்பது உண்மையா?"

"இது சரி அல்ல" என்று வேளாண்மை அமைச்சர் மன்னை ப. நாராயணசாமி கூறினார்.

தமிழகத்தில் தொழில் நடத்த ஜப்பானியர் ஆவல்

திருவண்ணாமலையில் இரும்புக் கனி இருப்பது கண்டுபிடிப்பு

மேலவையில் அமைச்சர் செ. மாதவன் தகவல்

சென்னை, ஆக. 23—

திருவண்ணாமலையில் இரும்பு கிடைப்பதை ஜப்பான் நிபுணர்கள் கண்டுபிடித்திருக்கின்றனர்; இது பற்றிச் சட்டமன்ற மேலவையில் உறுப்பினர்கள் கேட்ட கேள்விகளும் -- அமைச்சர் செ. மாதவன் அளித்த பதில்களும் வருமாறு:—

ஜெயராமரெட்டியார் (இ.காங்):—"ஜப்பானிய நாட்டினர் இந்தியாவில் தொழில் தொடங்க ஆர்வம் காட்டுவதாகக் கூறுகிறார்களே -- உண்மையா?"

அமைச்சர் மாதவன்:—"இந்தியாவுக்கு வந்து தொழில்கள் தொடங்குவது மற்றியும் -- ஒத்துழைப்பு மற்றியும் -- அதற்கு வசதியாக இங்குள்ள வாய்ப்புகள் சூழ்நிலைகள் பற்றியும் அறிய வந்த ஜப்பானிய நிபுணர் குழுவினர், தங்கள் அறிக்கையை ஜப்பான் அரசிடம் கொடுத்திருக்கின்றனர்; அந்த அறிக்கையைப் பற்றி நான் ஜப்பானில் இருந்தபோது எனக்குத் தகவல் கொடுத்தார்கள்.

"ஜப்பான் ஒத்துழைப்புடன் தொழில் தொடங்கத் தமிழ்நாட்டில்தான் அதிக வாய்ப்பு இருக்கிறது; காரணம், அங்குதான் குறைந்த ஊதியத்துடன் திறமை வாய்ந்த தொழிலாளர்கள் இருக்கிறார்கள்" என்று தங்கள் அறிக்கையில் அந்த நிபுணர்கள் கூறியிருக்கின்றனர்.

"அத்துடன், ஏற்கனவே ஜப்பானிய ஒத்துழைப்புடன் தொடங்கப்பட்ட தூத்துக்குடி இரசாயன உரத் தொழிற்சாலை -- கனரக நீர்த் தொழிற்சாலை -- திருவண்ணாமலை இரும்புப் படிவங்களைத் தோண்டியெடுத்தல் ஆகியவற்றில் அதிக அக்கறை காட்டி வருகிறார்கள்.

"திருவண்ணாமலை இரும்பை ரூ. 35 இலட்சம் செலவில் பொடியாக்கி -- நேரடியாக உருக்குத் தொழிற்சாலைக்குப் பயன்படுத்த முடியும் என்றும் கூறியிருக்கிறார்கள்."

உப்பு நீரைக் குடிநீராக்கும் திட்டம்

சங்கரலிங்கம் (தி.மு.க.):—'ஜப்பானியர்கள் உப்பு நீரைக் குடிநீராக்கும் திட்டத்தில் வெற்றி பெற்றிருப்பதாகக் கூறியிருக்கிறார்களே -- தமிழ்நாட்டில் அது மாதிரி திட்டம் எதுவும் அவர்களின் ஒத்துழைப்புடன் தொடங்கப்படுமா?'

அமைச்சர்:—'ஒரு திட்டத்தை நம்மிடம் கொடுத்திருக்கிறார்கள்; இப்போது தமிழ்நாட்டில் கிடைக்கக்கூடிய தண்ணீரின் விலையைவிட அவர்கள் திட்டத்தில் கூறும் விலை அதிகமாகவே இருக்கிறது."

தேசீய முக்கியத்துவம் வாய்ந்ததாக சென்னை அரும்பொருள் காட்சியகம்

தரத்தை உயர்த்துவது பற்றி அரசு பரிசீலனை

சட்டப் பேரவையில் கல்வி அமைச்சர் நாவலர் விளக்கம்

சென்னை, ஆக 22—

"சென்னை அரும் பொருள் காட்சி அகத்தை (மியூசியத்தை) தேசிய அரும் பொருள் காட்சி அகமாகத் தரம் உயர்த்தலாம் என்று மத்திய அரசினால் அமைக்கப்பட்ட அரும் பொருள் காட்சியக ஆய்வுக் குழு 1972-ம் ஆண்டில் பரிந்துரை செய்துள்ளதா?"

என்று, சட்டப் பேரவையில் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில், கல்வியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் கூறியதாவது:—

"சென்னை அரும் பொருள் காட்சி அகத்தையும் -- பம்பாய் அரும் பொருள் காட்சி அகத்தையும் தேசியக் காட்சி அகமாகத் தரம் உயர்த்தலாம் -- என்று மத்திய அரசு அமைத்துள்ள அரும் பொருள் காட்சி அகக் குழுவின் பரிந்துரையை மத்திய அரசு, மாநில அரசுக்கு அனுப்பி வைத்துள்ளது; அதனை அரசு தற்போது பரிசீலித்து வருகிறது."

கேள்வி:—"கடந்த முப்பது ஆண்டுகளாகச் சென்னை அரும் பொருள் காட்சி அகம் மாற்றமின்றிக் கிடக்கிறது என்பது உண்மையா?"

அமைச்சர்:—"புதிய மாற்றம் இல்லாமல் இருந்தாலும், நல்ல நிலையில்தான் அது இயங்கி வந்து கொண்டிருக்கிறது; 'மென்மேலும் அரும் பொருட்களை இடம் பெறச் செய்வதற்குப் போதுமான இடமில்லை என்பதால், பெரும்பான்மையான பொருட்களை இடம் பெறச் செய்ய முடியாத சூழ்நிலை இருக்கிறது' என்று அரும்பொருள் காட்சி அக இயக்குநர் அளித்துள்ள குறிப்பினை அரசு பரிசீலனை செய்து -- அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது."

தர்மலிங்கம்:—"சென்னை அருங்பொருள் காட்சி அகம், தேசியத் தகுதி பெறுவதற்கு என்னென்ன இருக்கவேண்டும் என்று குறிப்புகள் எதுவும் உண்டா?"

அமைச்சர்:—"பல்வேறு காரணங்கள் குறிக்கப்படுகின்றன; முதலாவது -- காட்சி அகத்தைக் காண வருகின்றவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதும், அதன் மூலம் கல்வித் துறைக்கு எப்படிப் பயன் ஏற்படுகிறது என்பதும், அங்கு வைக்கப்பட்டுள்ள பொருட்களின் தொன்மை எண்ணிக்கை ஆகியவையும், அதனைப் பராமரித்து வருகின்ற பயிற்சியாளர்களின் திறமையையும் எல்லாமே கணக்கிடுகிறார்கள்; அவற்றோடு ஒரு சிறப்பான நூல் நிலையமும் அமைந்திருக்க வேண்டும் என்பதும் முக்கியம்; இந்த அளவில் சென்னை மியூசியமும் -- பம்பாய் மியூசியமும் தேசியத் தகுதி பெறுவதற்குப் பரிந்துரைக்கப்பட்டிருக்கின்றன."

ஆற்காடு வீராசாமி:—"காட்சி அகத்தைக் காண வருகின்றவர்களின் எண்ணிக்கையும் தேசியத்தகுதி பெறுவதற்கு அவசியம் என்று சொல்லப்பட்டது; அப்படியானால், சென்னைக்கு வரும் வெளியூர் மாணவ -- மாணவியர் அவசியம் இந்த அரும் பொருள் காட்சி அகத்தைக் காணவேண்டும் என்று அரசு கல்வித் துறை மூலம் வலியுறுத்துமா?"

அமைச்சர்:—"சென்னைக்கு வருகிறவர்கள் பலரும், 'இந்த அரும் பொருட்காட்சி அகத்தைப் பார்த்துவிட்டுத்தான் போவது' என்று வருகிறார்கள்; எனவே, இப்போது வந்து பார்க்கின்றவர்களின் எண்ணிக்கையே தேசியத் தகுதி பெறுவதற்குப் போதுமானதாக இருக்கிறது என்றுதான், சென்னை மியூசியத்தையும் -- பம்பாய் மியூசியத்தையும் பரிந்துரைத்திருக்கிறார்கள்."

மாவட்ட ஆட்சித் தலைவர்களாகத் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்

மூன்று பேர் இருப்பதாகத் தகவல்

சென்னை, ஆக. 22—

"தமிழகத்தில் தற்போதுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்களில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச்சேர்ந்தவர்கள் மூன்று பேர் உள்ளனர்"

என்று சட்டப் பேரவையில், என். கிட்டப்பாவின் கேள்விக்குப் பதிலளிக்கையில் முதலமைச்சர் தெரிவித்தார்.

"மாவட்ட ஆட்சித் தலைவர்களை நியமிப்பதில் வகுப்புவாரி விகிதாசார முறை அனுசரிக்கப்படுவதில்லை; அவ்வப்போது தேவைக்கு ஏற்ப நியமிக்கப்படுகிறார்கள்"

என்று துணைக் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் முதலமைச்சர் தெரிவித்தார்.

சௌந்தர பாண்டியன்:—"முன்பிருந்த ஆட்சியில் ஒரே ஒருவர்தான் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச்சேர்ந்தவர் மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்தார்; இந்த ஆட்சியில் மூவருக்குப் பதவி கொடுக்கப்பட்டுள்ளது என்பது உண்மையா?"

முதல்வர்:—"அது பற்றித் தகவல் இல்லை; பொதுவாக விகிதாச்சாரம் பார்ப்பதில்லை."

தமிழகத்தில் குடும்பநலத் திட்டப் பணிகள்

இதுவரையில் 2 இலட்சம்பேருக்கு அறுவைச் சிகிச்சை

பேராசிரியர் க. அன்பழகன் தகவல்

சென்னை, ஆக. 22—

"தமிழ்நாட்டில் தீவிர குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் கீழ் எத்தனை ஆண்களும் -- பெண்களும் சிகிச்சை பெற்றுள்ளனர்?"

என்று, சட்டமன்ற பேரவையில், கழக உறுப்பினர் தங்கப் பாண்டியன் வினவினார்.

அமைச்சர் க. அன்பழகன்:— 21—3—72 வரையில் ஆண்கள் 1,80,977 பேர்களும் பெண்கள் 20,762 பேருக்கும் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டனர்.

"அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட ஆண்களின் எண்ணிக்கையில், தென் ஆற்காடு மாவட்டமும், பெண்களின் எண்ணிக்கையில் மதுரை மாவட்டமும் முதலிடம் வகிக்கின்றன."

சந்தானம் (சுயேச்சை):—"ஆண்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்வது தீங்கை உண்டாக்கும் என்று சொல்கிறார்களே?"

அமைச்சர்:—"விரும்புகிறவர்கள் தான் அறுவைச் சிகிச்சை செய்துகொள்கிறார்கள்; அவர்களின் உரிமையை மறுக்க முடியாது; நாட்டின் நன்மையைக் கருதி, மக்கள் பெருக்கத்தைக் குறைக்க வேண்டியிருக்கிறது."

வகாப்:—"தீவிர குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைக் கையாண்டதால் மாநிலத்துக்குரிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கையில் 2 குறைந்துவிட்டது என்பது தெரியுமா?"

அமைச்சர்:—"தமிழக அரசு எதிலும் ஏமாறுவது கிடையாது; மத்திய அரசிடம் எடுத்துச் சொல்லி '2 இடங்கள் குறையக் கூடாது' என்று வற்புறுத்தி வருகிறோம்.

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தால் மட்டும் மக்கள் தொகை குறைவது இல்லை; ஆகவே அனைத்தையும் சேர்த்தே கவனிக்க வேண்டும்; குடும்ப நலத் திட்டத்தில் அவசியத்தை முஸ்லிம் லீக் கட்சித் தலைவர்கள் உட்பட எல்லோரும் ஒப்புக்கொள்ள வேண்டும்."

ஏ. ஆர். தாமோதரன் (ஐக்கியக் கட்சி):—"இதனால் ஏற்படக் கூடிய பொருளாதார நிலைமையைக் கவனிக்கும்போது, நாடாளுமன்றத்தில் இழந்த 2 இடம் வேண்டும் என்பது முக்கியமா? அல்லது 1,000 குழந்தைகள் பிறப்பது அவசியமா?"

அமைச்சர்:—"என் சொந்தக் கருத்து, நாடாளுமன்றத்தில் 2 இடங்கள் கிடைப்பதைவிட, 1,000 பிள்ளைகள் பிறக்காமல் இருப்பதே சிறந்தது."

சென்னைப் பொது மருத்துவமனை

தரத்தை உயர்த்த நடவடிக்கை

சென்னை, ஆக 22—

"சென்னை மத்திய சிறையை வேறு இடத்திற்கு மாற்றிவிட்டு -- அந்த இடத்தில் சென்னைப் பொது மருத்துவமனையை விரிவுபடுத்தும் எண்ணம் இல்லை"

என்று மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், சட்டப் பேரவையில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்; அவர் மேலும் கூறியதாவது:—

"சென்னைப் பொது மருத்துவமனையின் தரத்தை உயர்த்துவதற்கும், பட்டப்பிற்காலப் படிப்பு வகுப்புகளை ஏற்படுத்துவதற்குமான பணிகள் மேற்கொள்ளப்படும்; அந்த மருத்துவமனையை விரிவுபடுத்தும் எண்ணம் இல்லை."

மாதம் ஒரு வானொலி உரை

முதலமைச்சரிடம் சட்டமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை

தமது நிலைமையை விளக்கி முதலமைச்சர் கலைஞர் பதில்

சென்னை, ஆக. 22—

"மாதம் ஒருமுறை முதலமைச்சர் அவர்கள் வானொலி மூலம் உரை வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?"

என்று சட்டப் பேரவையில், என். கிட்டப்பா கேட்ட கேள்விக்கு, 'இல்லை' என்று பதிலளித்தார் முதலமைச்சர்.

என். கிட்டப்பா:—"தற்போது வானொலியில் ஒலிபரப்பப்படும் மாநிலச் செய்தியில்கூட, இந்த அரசின் சாதனைகள் -- பணிகள் நல்லமுறையில் எடுத்துக்கொள்ளப்படுவதில்லை; எனவே, மாதம் ஒருமுறை முதலமைச்சர் அவர்களே அரசின் சாதனைகளை மக்களுக்கு எடுத்துச் சொல்வதற்கான ஏற்பாடு பற்றி இனியேனும் யோசிக்கப்படுமா?"

முதல்வர்:—"அரசின் ஒவ்வொரு துறையின் சாதனைகளையும்பற்றி அந்தந்தத் துறையின் தலைவர்கள் வானொலியில் எடுத்து விளக்குவதற்காக அழைக்கப்படுகிறார்கள்; இதற்காக முதலமைச்சர் மாதம் ஒருமுறை பேசவேண்டும் என்ற அவசியம் இல்லை; என்னைப் பொறுத்தவரையில் இந்த நாலைந்து ஆண்டுக் காலத்தில் ஒரு இருபது முறையாவது வானொலியில் பேசியிருப்பேன்; கவியரங்கங்களிலும்பங்குகொள்கிறேன்; இதற்கே எனக்குநேரம் ஒதுக்க முடியவில்லை; மாதம் ஒருமுறை என்றால், அது இயலாத காரியம்."

வீராசாமி:—"விவசாயப் போராட்டம் போன்ற நேரங்களிலாவது முதலமைச்சர் உண்மை நிலையை மக்களுக்கு விளக்குவதற்காக வானொலியில் உரை நிகழ்த்துவாரா?"

முதல்வர்:—"விடுதலை நாள் விழா மற்றும் அவசியப்படும் காலங்களில் முதலமைச்சர் வானொலியில் உரை நிகழ்த்துவது வழக்கமாக உள்ளது."

ஜேம்ஸ்:—"ஆட்சியின் குறைபாடுகளை எடுத்துச் சொல்ல எதிர்க் கட்சியினருக்கும் வானொலியில் பேச வாய்ப்பு அளிக்கப்படுமா?"

முதல்வர்:—"இதற்குப் பதில் சொல்லும் இடத்தில் நான் இல்லை."

காவேரி மணியம்:—"அமைச்சர்கள் கலந்துகொள்ளுகின்ற நிகழ்ச்சிகள் அதிகமாக வானொலியில் இடம் பெறுவதில்லை; இனியேனும் அதற்கு ஆவன செய்யப்படுமா?"

முதல்வர்:—"குறைபாடு ஏதேனும் இருக்குமானால், இங்கு கேட்கப்படும் கேள்விமூலம் வானொலி நிலையத்தார் திருந்திக் கொள்வார்கள் என நம்புகிறேன்."

சோணையா:—"முதலமைச்சரை நேரில் பார்க்கவும்--அவர் பேச்சைக் கேட்கவும் நாட்டில் இலட்சக்கணக்கான மக்கள் ஆவல் கொண்டிருப்பதால் முதல்வர் அவர்கள் டெலிவிஷனில் பேசுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?"

முதல்வர்:—"விரைவில் டெலிவிஷன் நிலையத்துக்கான அடிக்கல் நாட்டு விழா சென்னையில் நடைபெற இருக்கிறது."

வேளாண்மைத் துறையில் டிப்ளமோ வகுப்பு

எஸ்.எஸ்.எல்.சி. வகுப்பில் தேறியவர்களுக்கு வாய்ப்பு

'திட்டம் பரிசிலிக்கப்படுகிறது' அமைச்சர் தரும் தகவல்

சென்னை, ஆக 22—

"எஸ். எஸ். எல் சி. படித்தவர்கட்கு வேளாண்மைத் துறையில் 'டிப்ளமோ' வகுப்பு ஒன்றை ஏற்படுத்தும் யோசனை பரிசிலிக்கப்பட்டு வருகிறது"

என்று, வேளாண்மைத் துறை அமைச்சர் மன்னை நாராயணசாமி அவர்கள், சட்டப் பேரவையில் தெரிவித்தார்.

திரு. என். கிட்டப்பாவின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அவர் மேலும் கூறியதாவது:—

"எட்டாவது வரை படித்தவர்களுக்கு வேளாண்மைத் துறையில் ஓராண்டு பயிற்சி அளிக்கும் திட்டம் ஒன்று ஏற்கனவே நடைமுறையில் உள்ளது; எஸ். எஸ். எல்.சி. படித்தவர்களுக்கான டிப்ளமோ வகுப்பை 1973-74-ஆம் ஆண்டிலிருந்து துவங்குவதற்கான திட்டம் தற்போது ஆய்வில் உள்ளது."

'குறளக அங்காடி'-- இலாபத்திலேயே

இயங்குவதாகத் தகவல்

சென்னை, ஆக. 22—

'சென்னை 'குறளக'த்தில் இயங்கும் கதர் -- கிராமத் தொழில் அங்காடி இலாபத்திலேயே நடைபெறுகிறது; 1969-70-லும், 1970-71-லும் ஆண்டுக்கு ரூ. 25,000 அளவுக்கு இலாபம் கிடைத்தது; 1971-72-ஆம் ஆண்டுக் கணக்கு இன்னும் தணிக்கையாகவில்லை; இந்த ஆண்டில் இலாபம் இன்னும் கூடுதலாகவே இருக்கும்"

என்று கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனார், சட்டப் பேரவையில், என். கிட்டப்பாவின் கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

மலைத் தோட்டத் தொழிலாளருக்கு ஊதிய விகிதம்

தமிழக அரசு ஆய்வு

சட்டப் பேரவையில் அமைச்சர் என். வி. நடராசன் தகவல்

சென்னை, ஆக. 22—

"மலைத் தோட்டத் தொழிலாளர்களின் மிகைநேரப் பணிக்காக வழக்கமான ஊதியத்தைப் போல் இருமடங்கு ஊதியம் பெறுவதற்கு இயலும் வகையில் குறைந்த அளவு ஊதிய விதிகளைத் திருத்துவதற்கான செயற்குறிப்பு அரசின் ஆய்வில் இருந்துவருகிறது"

என்று தொழிலாளர் நலத்துறை அமைச்சர் என். வி. நடராசன் அவர்கள் தெரிவித்தார்.

"மலைத் தோட்டத் தொழிலாளர் பற்றிய முத்தரப்பு உடன்பாடு குறித்த அறிக்கைகள் எதுவும் அரசின்முன் வைக்கப்பட்டிருக்கிறதா?"

என்று சட்டப் பேரவையில் காவேழவேந்தன் வினவினார்.

அமைச்சர் என். வி. நடராசன்:—"ஏற்கனவே அந்தக் கருத்தை அறிய ஆணையாளர் நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறார்; ஆணையாளர் முதநிலை அறிக்கை விரைவில் அளிக்கப்படும்."

என். கிட்டப்பா:—'தொழிலாளர்களுக்கு உற்பத்திக்கு ஏற்ற ஊதியம் வழங்கவேண்டும் என்ற திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா?"

அமைச்சர்:—"உற்பத்திக்கு ஏற்ற ஊதியம் வழங்கவேண்டும் என்கின்ற திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை; ஆனால் தனித்தனியே நிறுவனங்களோடு பேசி முடிவு எடுக்கப்படுகிறது; குறிப்பாக மலைத் தோட்டங்களில் தேயிலை பறித்தல் உற்பத்தியுடன் இணையாமல் இருக்கிறது; எனவே, இது போன்ற துறைகளைக் கவனப்படுத்தி ஊதிய விகிதங்களை அதிகரிக்கச் செய்வதில் அரசு அக்கறை செலுத்தும்."

தமிழகத்துக்குச் சிறுவாணி நீர்

கேரளத்துடன் விரைவில் உடன்பாடு

கோதாவரி--காவிரி இணைப்பு; தமிழக அரசு கோரிக்கை-- மேலவையில் அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா அறிவிப்பு

சென்னை, ஆக. 22—

"சிறுவாணி நதி நீரைப் பயன்படுத்துவது பற்றிக் கேரளத்துக்கும்--தமிழ்நாட்டிற்கும் இடையே விரைவில் உடன்பாடு ஏற்படும்" என்று பொதுப் பணித்துறை அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா சட்டமன்ற மேலவையில் நம்பிக்கை தெரிவித்தார்.

இத்தொடர்பில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் கூறியதாவது:—

"இது சம்பந்தமாக இரு அரசாங்கங்களுக்குமிடையே கடிதப் போக்குவரத்து தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

அண்மையில், சனவரி—பிப்ரவரி மாதங்களில் திருவனந்தபுரத்தில் அரசுச் செயலாளர் மட்டத்தில் நடைபெற்ற சந்திப்புக் கூட்டத்தில் சிறுவாணித் திட்ட நால் ஒப்பந்தம் பற்றி நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின்போது தமிழ்நாட்டில் அந்தத் தண்ணீரைத் தொழிற்சாலைகளுக்குப் பயன்படுத்துவது பற்றியும், தமிழ்நாட்டின் பயனுக்காக மொத்தம் எவ்வளவு தண்ணீர் விடவேண்டும் என்பது பற்றியும் சில கருத்து வேறுபாடுகள் தோன்றின; இதுபற்றித் தமிழ்நாடு அதிகாரிகளின் கருத்துக்களைக் கேரள அரசிடம் தெரிவிப்பதாக அந்தப் பேச்சுவார்த்தைகளின்போது கேரள அரசு அதிகாரிகள் உறுதி கூறினர்; அதைப்பற்றிய முடிவும் ஏற்படும்.

தேசிய அளவில் கங்கை—காவிரி இணைப்புக்குமுன் கோதாவரி—காவிரி இணைப்பு சம்பந்தப்பட்ட திட்டத்தை முன்னதாக எடுத்துப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று பாசனக் குழுவிடம் அளிக்கப்பட்டுள்ள அறிக்கையில் தமிழ்நாடு அரசு கேட்டுக் கொண்டிருக்கிறது.

ஆந்திரத்தில் கோதாவரி-கிருஷ்ணா நதிகளின் உபரி தண்ணீரும், கேரள நதிகளிலிருந்து கிடைக்கும் உபரி நீரும் தமிழ்நாட்டின் பயனுக்காகக் கிடைக்கச் செய்ய வேண்டும் என்ற யோசனையையும் குழுவிடம் தமிழக அரசு தெரிவித்திருக்கிறது.

தமிழ்நாட்டில் சுமார் 21,000 ஏக்கர்களுக்குப் பாசன வசதி கிடைக்கக்கூடிய கீழ் நீரார் அணையும், அதனைத் தொடர்ந்து சுமார் 5 மைல் நீளம் இருக்கக் கூடிய சுரங்கக் கால்வாயும் கட்டும் பணி கேரள அரசின் ஒப்புதலுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது.

மேற்படி தேக்கத்திலிருந்து 250 கோடி கன அடி தண்ணீரைப் பயன்படுத்திக்கொள்ளத் தமிழ்நாட்டிற்கு உரிமை உண்டு."

பருவ மழை தவறியதால் ஏற்பட்ட விளைவு

வருவாய்த்துறைவாரிய உறுப்பினர்கள் ஆய்வு

சென்னை, ஆக. 21—

"தமிழ்நாட்டில் பருவ மழை தவறிய காரணத்தால் மாவட்டங்கள் நிலைமை பற்றி ஆராய நடவடிக்கை எடுக்கப்படுகிறதா?"

என்று சட்டப் பேரவையில் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில், அமைச்சர் ப. உ. சண்முகம் கூறியதாவது:—

"தமிழ்நாடு முழுவதும் இதுபற்றி ஆராய வருவாய்த்துறை வாரிய உறுப்பினர்கள் அனுப்பப்பட்டிருக்கிறார்கள்; அவர்கள் வந்ததும் அதுபற்றி அறிக்கை விரைவில் கிடைக்கும்."

ஆஸ்துமா நோய் சிகிச்சை முறை

சென்னை, ஆக. 22—

"ஆஸ்துமா (காச) நோய்க்குப் புதிய முறையில் இப்போது சிகிச்சை செய்கிறார்கள்; கழுத்துக்கு அருகிலுள்ள நரம்பை அறுத்துச் சிகிச்சை செய்யும் முறையைக் கோவையிலுள்ள 'இராமகிருஷ்ண நர்சிங் ஹோம்' என்ற மருத்துவமனையில் செய்கிறார்கள்; அதனால் 100 க்கு 70 பேர் முழுக் குணமடைகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா?"

என்று சட்டமன்ற மேலவையில் வசந்தபை (சுயேச்சை) வினவினார்.

அமைச்சர் க. அன்பழகன்:— "அதுபற்றி அரசுக்குத் தகவல் இல்லை."

நிலப் புரட்சியில் தீவிரம்

மீன்பிடித் தொழிலில் முன்னேற்றம்

அமைச்சர் சத்தியவாணிமுத்து வலியுறுத்தல்

சென்னை, ஆக. 20—

சென்னையில் உள்ள மத்திய கடல் மீன் ஆராய்ச்சி நிலையம் 1947 முதல் 1953 வரையில் மதிப்பாய்வு மையமாக இருந்தது; பின்னர் 1953-ல் ஆராய்ச்சிப் பிரிவாக மாறியது; வட தமிழகத்தின் கடல் மீன் வள இயல்புகளை ஆராய்ந்து மீன்பிடித் தொழிலை தக்க முறையில் நடத்துவதற்கும் -- இருக்கின்ற மீன் வளத்தைச் சரியான முறையில் பயன்படுத்துவதற்கும் ஏற்ற ஆலோசனைகளை அரசுக்கும் -- அத்தொழிலில் ஈடுபடுகிறவர்களுக்கும் கூறி வருகிறது.

என்று, இந்த ஆராய்ச்சி நிலையத்தின் வெள்ளி விழாவையொட்டி, சிறப்புக் கண்காட்சி ஒன்றை அமைச்சர் திருமதி சத்தியவாணி முத்து திறந்துவைத்துப் பேசுகையில் கூறியதாவது:—

மீன் சிறந்த உணவாகும்; அதற்குத் தக்க முக்கியத்துவம் கொடுக்கவேண்டும்.

பசுமைப் புரட்சியை நோக்கிச் செல்லும் நம் நாடு, நிலப் புரட்சியிலும் தீவிரம் காட்ட வேண்டும்.

1951-ல் 0.44 இலட்சம் டன்னாக இருந்த மீன்பிடிப்பு, 1971-இல் 2.10 இலட்சம் டன்னாக அதிகரித்தது; நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 3 இலட்சம் டன் இலக்கை எட்டிப் பிடிக்க முடியும்.

மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள மீனவர்களுக்குத் தமிழக அரசு எல்லா உதவிகளையும் செய்துவருகிறது."

மாரடைப்பால் ஏற்படும் மரணம்

தவிர்க்க முடியும் எனக் கருத்து

ஒருவருக்கு முதல் தடவை மாரடைப்பு வந்து விட்டுக் குணமடைந்து மீண்டும் இரண்டாவது தடவையாக மாரடைப்பு ஏற்பட்டுவிட்டால், அது பெரும்பாலும் குணமாகாமல் அவர் மரணமடைந்துவிடுவார்; ஆனால் இதைத் தவிர்க்க முடியுமென்று நம்பப்படுகிறது.

இரத்தக் குழாய் அறுவைச் சிகிச்சையைக் காலா காலத்தில் செய்துகொண்டால் இம்மாதிரி மாரடைப்பு மரணங்கள் ஏற்படாமல் தவிர்க்க முடியும்.

கோடி கோடியாகக் கொடுத்தும் திருப்தி இல்லையா?

மாதம் நூறு ரூபாய்க்கும் வழியில்லாத ஏழைகளை எண்ணிப் பாருங்கள்

மற்ற மாநிலங்களுடன் ஒப்பிட்டு நிலைமையை உணருவீர் -- அரசு ஊழியர்கட்கு முதல்வர் கனிவுரை

சென்னை, ஆக. 23—

" எல்லா மாநிலங்களையும்விட – தென் பகுதியிலே இருக்கின்ற எல்லா மாநிலங்களையும் விட – அரசாங்க ஊழியர்கள் அதிகப் பயன்பெறுகின்ற வகையிலே சம்பளம் தருகின்ற மாநிலம் தமிழ்நாடு ஒன்று மட்டுமேதான் !

" ஆனால், 'குட்டக் குட்டக் குனிகின்றார்கள்' என்கின்ற காரணத்தாலோ என்னவோ – அல்லது, 'கேட்டால் தருகின்ற அளவிலே இருக்கின்றார்கள்' என்ற நிலையிலோ – அல்லது எந்த ஒரு சிறு பிரச்சினையானாலும் – தலைமையமைச்சர் இந்திரா காந்தி சொன்னதுபோல் – 'எதிர்க் கட்சிக்காரர்கள் எல்லாம் இங்கே அணிவகுக்கத் தயாராக இருக்கின்றார்கள் என்ற நம்பிக்கையின் காரணத்தாலோ என்னவோ – தமிழ்நாடு அரசு அலுவலர்கள் 'திருப்தி இல்லை – திருப்தி இல்லை' என்று தெரிவித்துக் கொண்டிருக்கின்றார்கள் !

" எல்லா மாநிலங்களையும் மிஞ்சக்கூடிய அளவில்தான் நாம், நம்முடைய ஊதியக் குழுவின் மூலமாகவும் அதற்குப் பிறகு அளித்திருக்கக்கூடிய அறிவிப்புகள் மூலமாகவும் ஊதிய உயர்வுகளை அரசாங்க அலுவலர்களுக்குச் செய்துகொண்டுவருகிறோம்.

" எனவே, இதற்கு மேலும் போராட்டங்கள் – கறுப்புத் துணி அணிவது என்றால், நாங்களும் கறுப்புத் துணி அணியவேண்டியவர்களாகத்தான் இருக்கிறோம்; இதற்கெல்லாம் பணம் கேட்டு – மத்திய அரசு பண உதவி செய்ய வேண்டுமென்று கேட்டு – நாங்களும் கறுப்புத் துணி அணிவதைத் தவிர வேறு வழியில்லை; எனவே, 'இந்த அளவுக்குத்தான் இப்போது செய்யமுடியும் – இதற்குமேல் இப்போது செய்ய முடியாது' என்று திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

" ரூ. 400 சம்பளம் வாங்குகின்றவர்கள் ரூ. 500 வேண்டுமென்று கேட்டால், அதிலே இருக்கின்ற வித்தியாசம் ரூ. 100; இந்த ரூ 100 கூட வருமானம் பெறாத ஏழை எளிய மக்கள் ஏராளமானவர்கள் இந்த நாட்டிலே இருக்கிறார்கள் என்பதையும் அரசு அலுவலர்கள் மனதிலே கொள்ளவேண்டும் "

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சட்டப் பேரவையில் சுட்டிக்காட்டி விளக்கிக் குறிப்பிட்டார்; துணை மதிப்பீடுகள் பற்றிய விவாதத்திற்குப் பதிலளிக்கையில் அவர் கூறியதாவது :—

1961—62-ம் ஆண்டிலேகூட இம்மடிப்பட்ட முதல் துணை மதிப்பீடுகள் 19.73 கோடிக்குக் கொண்டுவரப்பட்டது.

1666—67-ல் முதல் துணை மானியக் கோரிக்கைக்கு 20 72 கோடிக்குக் கொண்டு வரப்பட்டது.

இப்பொழுது கொண்டுவரப்பட்டிருக்கிற துணை மானியக் கோரிக்கையின் மொத்த மதிப்பீடு ரூ. 8.97 கோடியாகும்.

பொதுவாக வேலை வாய்ப்புத் திட்டங்களுக்கு மத்திய அரசு ஒரு புதிய திட்டத்தை உருவாக்கி -- அதை மாநிலங்கள் நிறைவேற்ற வேண்டுமென்று கோரியது.

முதல் வரவு—செலவுத் திட்டத்தில் வேலை வாய்ப்புத் திட்டங்களையும், இணைப்புச் சாலைகள் அமைப்பதற்கான திட்டங்களையும் முன்பே இந்த அவையிலே அறிவித்திருந்தாலும்கூட, மத்திய அரசு, மே மாதத்திற்குப் பிறகு அந்தத் திட்டத்தை அறிவித்ததன் அடிப்படையில் வேலை வாய்ப்புத் திட்டத்திற்காக ரூ. 4 கோடி நாம் ஒதுக்க வேண்டிய சூழ்நிலைக்கு ஆளானோம்.

அந்த நாலரைக்கோடி ரூபாயில் மத்திய அரசாங்கமே சரி பாதி தரும் என்றாலும், அவர்கள் தருவதை எதிர்பார்த்து முன்கூட்டி நாம் செலவிட வேண்டியவர்களாக இருக்கிறோம்.

ஆகவே, இந்தத் துணை மதிப்பீட்டுக்கோரிக்கையின்மொத்த தொகையான ரூ. 9 கோடியில் ரூ. 4 கோடி இந்த வகையிலே இங்கே கேட்கப்பட்டிருக்கிறது.

மத்திய அரசாங்கமே வெளியிட்டுள்ள திட்டங்களை மத்திய அரசாங்கமே நிறைவேற்றாமல், அதிலே மாநில அரசும் தன்னுடைய பங்கைச் செலுத்துமாறு இந்தத் துணை மதிப்பீட்டில் கோரப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்; பல்வேறு பிரச்சினைகள் இங்கே சொல்லப்பட்டது; 'இரண்டாவது ஊதியக் குழுவுக்கு பிறகு ஏற்பட்டுள்ள சில முரண்பாடுகளை நீக்க ஒரு நபர் குழு வெளியிட்டுள்ள பரிந்துரையும், அதையொட்டி அரசு எடுதத முடிவுகளும் எல்லோருக்கும் அதிருப்தி அளிக்கக்கூடிய வகையிலே இருக்கிறது' என்று இங்கே பேசியவர்கள் சொன்னார்கள்.

இரண்டாவது ஊதியக் குழு தனது சிபாரிசுகளை அறிவித்த நேரத்தில், இந்த அரசுக்கு ரூ 22 கோடி வழங்கியிருக்கிறது; அதற்குப் பிறகு அண்மையிலே 3 அல்லது 4 திங்களுக்கு முன்பு மேலும் ரூ 10 அக விலைப் படிக்காக உயர்த்திய நேரத்தில் ரூ. 6 கோடி வழங்கியிருப்பதும் இப்பொழுது சட்டப் பேரவையில் அறிவித்த வகையிலே ரூ. 5 கோடி ரூபாயும் -- ஆக கிட்டத்தட்ட ரூ 38 கோடி கோடியை அரசு அலுவலர்களுக்காக வழங்குகின்ற அந்த நிலைமையை நாம் உருவாக்கி இருக்கிறோம் என்பதை உணரவேண்டும்.''

காஞ்சிப் பெரியவர்

அ. க. தங்கவேலர் மறைவு

சென்னை, ஆக. 23 –

பேரறிஞர் அண்ணா அவர்களின் மிக நெருங்கிய நண்பரும் -- முன்னாள் காஞ்சி நகராட்சித் தலைவருமான திரு. அ. க. தங்கவேல் அவர்கள நேற்று காலை காஞ்சியில் இயற்கையெய்தினார் என்ற செய்தியறிந்து வருந்துகிறோம்.

எண்பது வயதான திரு. தங்கவேலர் நீதிக் கட்சிக் காலத்திலிருந்து நமது இயக்கத்தில் ஈடுபாடுடையவராக இருந்து வந்திருக்கிறார். தமிழகச் சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் இருந்திருக்கிறார்.

அவரது மறைவுச் செய்தி கேட்டதும், முதலமைச்சர் கலைஞர் அவர்கள், தங்கவேலரின் குடும்பத்துக்கு இரங்கல் தெரிவித்துத் தந்தி அனுப்பியுள்ளார்.

திரு. தங்கவேலர் அவர்களின் மறைவால் துயருறும் அன்னார் குடும்பத்தாருக்கு, நமது ஆழ்ந்த பரிவும் ஆறுதலும் உரித்தாகுக.

—ஆசிரியர்

நல்ல காரியத்துக்கும் களங்கமா?

'மூதறிஞர்'களின் மேலான கவனத்துக்கு!

சென்னை ஆக. 23—

பிச்சைக்காரர் நல நிதி -- கண்ணொளி அளிக்கும் திட்டம் ஆகியவற்றைப் பற்றியும் குறை சொல்லச் சிலர் முயல்கிறார்கள்.

ஒரு நல்ல காரியம் நடைபெறுகிறபோது அதைப் பற்றிக் குறை சொல்லும் போக்கு வளர்ந்து வருவது நல்லதல்ல !

பிச்சைக்காரர் நல நிதி -- கண்ணொளி வழங்கும் நிதிகளுக்குக் கணக்கே இல்லை என்பதுபோல் -- சாதாரணமானவர்கள் அல்லர் -- மூதறிஞர்கள்' என்று போற்றப்பட்டவர்களே கூறுகிறார்கள்; அவர்களது பத்திரிகைகளும் எழுதிக் காட்டுகின்றன !

மேற்கூறிய அந்தப் பணிகளுக்கான அனுமதியைச் சட்டமன்றம்தான் வழங்குகின்றது; ஆகவே, அக்கவுண்டன்ட் -- ஜெனரலின் கணக்குத் தணிக்கைக்கு அவை உட்படுகின்றன !

அதுமட்டுமேல்ல; இதற்கான வரவு -- செலவுகளை உள்நிதிக் கண்காணிப்பாளர் கவனிக்கிறார்.

ஆகவே, பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம் -- கண் சிகிச்சை முகாம் திட்டம் ஆகியவற்றுக்கான நிதி, ஏதோ தி. மு. கழக நிதியாக -- கருணாநிதியின் சொந்த நிதியாகப் போய்விடுகிறது என்று கருதத் தேவையில்லை.

அதுமட்டுமல்ல; இந்த நிதி, முறையாக ரிசர்வ் வங்கியில் போடப்படுகிறது; இந்த நிதியைக் கையாளும் வகைக்கு அரசின் நிதித் துறை துணைச் செயலாளர் பொருளாளராக இருந்து வருகிறார்; ஆகவே இதுபற்றிக் குறை கூறுவது சரியல்ல !"

--முதலமைச்சர் கலைஞர்
(சட்டமன்ற மேலவையில்)

தொழில் நுணுக்கக் கல்வியை விரிவுபடுத்தத் திட்டம்

இரஷ்யாவின் உதவிக்குத் தமிழ்நாடு முயற்சி

கோரிக்கை நிலைபற்றி கல்வி அமைச்சர் தகவல்

சென்னை, ஆக. 22—

" சோவியத் இரஷ்யாவின் உதவியைப் பெற்றுத் தமிழகத்தில் தொழில் நுணுக்கக் கல்வியை விரிவுபடுத்தும் ஒரு யோசனை அரசுக்கு இருந்துவருகிறது; இதுபற்றி சோவியத் இரஷ்யாவின் உதவி கோரி, மத்திய அரசுக்குத் தமிழ்நாடு அரசு கடிதம் எழுதியிருக்கிறது; ஆனால் இதுவரை ஏதும் உதவி கிடைக்கவில்லை''

என்று, கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், சட்டமன்றப் பேரவையில், கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்; இத் தொடர்பில் அவர் விளக்கியதாவது :—

" கிண்டி பொறியியல் கல்லூரியில் தொழில் நுணுக்கக்கல்வியை விரிவுபடுத்த சோவியத் வல்லுநர்களைப் பயன்படுத்திக் கொள்ளவும் -- ஆசிரியர்களைப் பயிற்சிக்காக சோவியத் இரஷ்யாவுக்கு அனுப்பவும், முதுநிலைப் படிப்பு மற்றும் பி.எச்.டி. கல்வித் துறையில் ஆராய்ச்சி வசதிகளை நிறுவதற்குத் தேவையான சாதனங்களை இறக்குமதி செய்யவும், உதவி கோரப்பட்டது.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் கூறியதாவது :—

" 1975-ல் கல்பாக்கம் அணு மின்சார நிலையம் உற்பத்தியைத் துவக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது; ஆனால், 1976 துவக்கத்தில் மின்சார உற்பத்தி துவங்கும்.

1974 துவக்கத்தில் கல்பாக்கம் அணு மின்சார நிலையத்தை இயக்கிவிட முதலில் திட்டமிடப்பட்டிருந்தது.

அவசர கால உணவு உற்பத்தித் திட்டம்

மாநில அரசுகள் ஏற்பு

புதுடில்லி, ஆக. 21—

அவசர நிலை உணவு உற்பத்தித் திட்டத்தின்கீழ் தங்களிடம் தெரிவிக்கப்பட்ட இலக்குகளை மாநில அரசுகள் ஏற்றுள்ளதாகத் தெரிகிறது.

கூடுதலாக 158 இலட்சம் டன் உணவுத் தானியம் உற்பத்தி செய்யத் திட்டம் வழிகோலுகிறது; வறட்சியின் விளைவாகத் தானியப் பற்றுக்குறை இந்த இலக்கைவிடக் குறைவாக உள்ளபோதிலும், இத்திட்டத்தை நிறைவேற்ற மத்திய வேளாண்மைத் துறை உறுதி கொண்டிருக்கிறது.

• 88 இலட்சம் டன் கோதுமை -- 45 இலட்சம் டன் கோடை அரிசி -- 5 இலட்சம் டன் சோளம் -- 20 இலட்சம் டன் பருப்பு வகைகள் ஆகியவை கூடுதல் உற்பத்தி இலக்குகளாகும்.

அவசர காலத் திட்டத்தை நிறைவேற்ற அவசியமான விதை -- உரம் போன்ற வேளாண்மைப் பொருட்களை வழங்க மாநிலங்களுக்கு மத்திய அரசு உறுதி கூறியிருக்கிறது.

மாநிலங்களின் 'காரிப்' திட்டங்களுக்கு ரூ. 20 கோடி குறுகிய காலக் கடனுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, [illegible] (24, [illegible] சென்னை-10) [illegible]